**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI**

**OS 06-2021**

**PW-1**

**பெயர் :** பாப்பாத்தி

**க/பெ :** காட்டுராஜ்

**தேதி :** 19.01.2024

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 3,5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. என் தந்தையின் பெயர் மாரநாயக்கர். என் தந்தையுடன் பிறந்தவர்கள் 4 சகோதரிகள், 2 சகோதரர்கள். அவர்களுள் ஒரு சகோதரி மட்டுமே உயிருடன் உள்ளார். அவர் பெயர், முகவரி தெரியாது. மாரநாயக்கர் 2005 ல் பாரப்பாளையத்தில் இறந்தார். மாரநாயக்கர் மண்ணரையில் தான் குடியிருந்து, அங்கு தான் இறந்தார் என்றால் சரிதான். என் தாயார் பாப்பாத்தி, எப்போது எங்கு இறந்தார் என்று எனக்கு தெரியாது. எனது தாயார் நான் குழந்தையாக இருக்கும் போதே இறந்துவிட்டார். எனது தாயாரின் தகப்பனார் பெயர் பாப்பநாயக்கர். எனது தாயாரின் தாயார் பெயர் தெரியாது.

2. எனது தகப்பனாரின் இரண்டாவது தாரம் எனது உறவினரா என்றால் ஆமாம். அவரும் இதே ஊர்தான். தாவாவில் எந்த இடத்திலும் எனது தாயார் இறந்த பின்பு தான் எனது தகப்பனார் 1ம் பிரதிவாதியை திருமணம் செய்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில், எந்த இடத்தில் வைத்து 1ம் பிரதிவாதியை எனது தகப்பனார் திருமணம் செய்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் எனது தந்தையுடன் தான் இருந்து வந்தேன். எனது தந்தை இரண்டாவது திருமணம் செய்யும் வரையில் நான் எனது தந்தையுடன் இருந்தேன் என்றால் சரிதான். எனது தந்தை தான் எனக்கு திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான்.

3. வாதிகள் மற்றும் 1-8 பிரதிவாதிகள் தற்சமயம் இந்நீதிமன்றத்தின் எல்லையில் வசிக்கவில்லை என்றால் சரிதான்.

**(3, 5 பிரதிவாதியின் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது )**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2024.01.19 20:17:20 +0530

மாவட்ட உரிமையில் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.